# <u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொன்னேரி.</u>

## <u>அ.வ.எண்.347/2007</u>

இந்நீதிமன்றத்து எழுத்தர் திருமதி. G. செல்வி, உதவியாளர் அவர்களால் சத்திய பிரமானம் செய்விக்கப்பட்டு வாதி / பிரதிவாதி தரப்பு சாட்சி வாக்கு மூலம் 1873 ஆம் ஆண்டு 10-வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2023 ஆண்டு செப்டம்பர் மாதம் 19 -ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

**தேதி - 19.09.2023**

**பெயர் - தசரத ராம ரெட்டி**

**த/பெ - செங்கா ரெட்டி**

**சாட்சி - PW1**

**விசாரணை தொடங்கும் நேரம்- 11.42 a.m.**

**<u>குறுக்கு விசாரணை</u> -**

1. வழக்கில் நான் என்னென்ன பரிகாரங்கள் கோரி தாக்கல் செய்துள்ளேன் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். வழக்கு சொத்து எனது பூர்வீக சொத்து எனது பாட்டனார் அனுபவித்து அதன் பிறகு நான் அனுபவித்து வந்த சொத்து அது எனக்கு சொந்தம் என கோரி பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன். நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள ஆவணங்களின் விவரம் தெரியுமா என்றால் தெரியும். பிரதிவாதிகள் இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ள பதில் உரையின் விவரங்கள் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். நான் முதலில் இந்த வழக்கு தாக்கல் செய்த போது சா்வே எண் 306/3 மற்றும் 249/2க்கு தான் வழக்கு தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். வழக்கில் இரண்டாம் இன சொத்தான சா்வே எண் 249/2 குறித்த வழக்கு பரிகாரத்தை நான் திரும்ப பெற்றுக்கொண்டேன் என்றால் சரிதான்.

2. இவ்வழக்கில் வழக்குரை பத்தி 22(ஐ)-யில் மேற்படி சா்வே எண் 249/2 குறித்த வழக்கு பரிகாரத்தை திரும்ப பெற்றுக்கொள்வதாகவும் அது குறித்து வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது குறித்தும் நான் தெரிவித்துள்ளேன் என்றால் சரிதான். சொத்து விவரத்தில் இரண்டாம் இண சொத்து நீக்கப்படவில்லை என்றால் சரிதான். தற்போது தாவா சா்வே எண் 306/3 குறித்தே நடைபெறுகிறது என்றால் சரிதான். நான் தாக்கல் செய்த வாசா ஆ 1

ஆவணத்தில் பட்டா எண் 738 பட்டாவை ரத்து செய்ய பறிப்பித்த மறுஉத்தரவை ஆட்சேபித்தல் தொடர்பாக என கண்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி பட்டா 738 தாவா சொத்து குறித்த பட்டா அல்ல என்றால் சரியல்ல. எனது பிரமான வாக்குமூலத்தில் பக்கம் 8, பத்தி 26 ல் 8வது வரியில் பட்டா எண் 737யை ரத்து செய்ய 2ம் பிரதிவாதி கொடுத்த மனுவினை தள்ளுபடி செய்ய பிறப்பித்த உத்தரவின் அசல் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வாசா ஆ 1 தாவா சொத்துக்கள் குறித்து பட்டாவின் ரத்து ஆவணம் அல்ல என்றால் சரியல்ல.

3. வாசா ஆ 2 -ல் தாவா சொத்து சர்வே எண் 306/3 குறித்து எங்கும் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். அது விடுபட்டுள்ளது. வாசா ஆ 2 ஆவணத்திலும் பட்டா எண் 738 ரத்துக்கான ஆட்சேபனை என்றே குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனது பிரமான பத்திரம் பக்கம் 7 பத்தி 22ல் என்னுடைய பட்டா எண் 737 பொன்னேரி வட்டாச்சியரால் ரத்து செய்யப்பட்டு நரசம்மாள் பெயரில் பட்டா எண் 157 வழங்கப்பட்டதாக நான் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள வாசா ஆ 2 ஆவணத்தில் வசந்தராவ் வகையராக்கள் உடைய பாட்டியார் நரசம்மாள் கிரையம் பெற்றுள்ளதாக கூறியுள்ளார்கள் என்று குறிப்பிடப்பட்டிருந்தது என்றால் சரிதான். நரசம்மாள் பெயரில் உள்ள கிரைய பத்திரத்தை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேனா என்றால் இல்லை. மேற்படி நரசம்மாள் பெயரில் உள்ள கிரைய பத்திரம் ஆவண எண் 2541/1941 பத்திரத்தில் வழக்கு சொத்தில் குறிப்பிடப்பட்டுள்ள புல எண் 306/3 மற்றும் 249/2 ஆகிய இரு புல எண்களும் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. நரசம்மாள் பெயரில் உள்ள கிரைய பத்திரத்தை ராஜம்மாள் மற்றும் அவரது மைனர் மகன் சண்முக சுந்தரம் ஆகியோர் எழுதிக்கொடுத்துள்ளனர் என்றால் சரிதான்.

4. மேற்படி ஆவணத்தில் 4 சர்வே எண்கள் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் எனக்கு அது குறித்து தெரியாது. மேற்படி ஆவணத்தில் நரசம்மாளுக்கு சர்வே எண் 306/3ல் 1 ஏக்கர் 22 சென்ட் மற்றும் சர்வே எண் 307/1 ல் 54 சென்ட் மற்றும் சர்வே எண் 249/2ல் 87 சென்ட் மற்றும் 290/4ல் 1 ஏக்கர் 31 சென்ட் ஆக மொத்தம் 3 ஏக்கர் 94 சென்ட் நிலத்தை நரசம்மாளுக்கு விற்பனை செய்துள்ளனர் என்றால் எனக்கு அது குறித்து தெரியாது. எனது பிரமான பத்திரம் பக்கம் 2 பத்தி 3 மற்றும் 4ல் மேற்படி ராஜம்மாள் பெயரில் உள்ள கிரைய

பத்திரம் குறித்தும் மேற்படி சர்வே எண்கள் குறித்தும் நான் கூறியுள்ளேன் என்றால் சரிதான். ஆனால் சொத்தின் அனுபவம் எங்கள் இடத்தில் தான் இருந்தது. சைதாபேட்டை கோட்டாச்சியரிடம் எனது பெயரில் கொடுக்கப்பட்ட பட்டாவை ரத்து செய்தது குறித்து மேல் முறையீடு செய்தேன் என்றால் சரிதான்.

5. வாசா ஆ 2 ஆவணத்தில் வசந்தராவ் வகையராக்கள் உடைய பாட்டியார் நரசம்மாள் கிரையம் பெற்றுள்ளதாகவும் பத்திர எண் 2541/1941 தேதி 02.10.1941ன் படி கிரையம் பெற்றிருந்தும் மேற்படி தேதியில் இருந்தே வாதியாகிய தசரத ராம ரெட்டியாரிடம் வழக்கு சொத்தின் அனுபவம் இருப்பதால் கோட்டு மூலம் தாவாவை தீரத்துக்கொள்ளும் படி குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி உத்தரவு 26.08.1985 தேதியில் போடப்பட்டு இருந்தும் 2007வரை நான் எந்த வழக்கும் தாக்கல் செய்யவில்லை என்றால் வழக்கு சொத்தின் அனுபவம் என்னிடம் இருந்ததால் நான் வழக்கு தாக்கல் செய்யவில்லை. நான் 04.06.2007ல் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினேனா என்றால் அனுப்பினேன். அந்த அறிவிப்பில் 10வது பிரதிவாதி ஜெயக்குமாருக்கும் அறிவிப்பு அனுப்பினேன் என்றால் சரிதான். ஆதியில் வழக்கு தாக்கல் செய்த போது ஜெயக்குமார் மீது முதலில் வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மேற்படி வழக்கறிஞர் அறிவிப்பு முதல் பிரதிவாதிக்கு அனுப்பப்பட்டது No such person என திருப்பப்பட்டது என்றால் அவர்கள் வாங்கிக்கொள்ளாமல் திருப்பிவிட்டார்கள். மூன்றாம் பிரதிவாதிக்கும் மேற்படி வழக்கறிஞர் அறிவிப்பு சார்வு செய்யப்படவில்லை என்றால் அவர்களும் வாங்க மறுத்து திருப்பி அனுப்பிவிட்டார்கள்.

6. தாவா சொத்தில் எனக்கு எந்த ஒரு உரிமையும் இல்லாததால் தான் மேற்படி அறிவிப்பிற்கு 2ம் பிரதிவாதி எந்த பதிலும் அனுப்பவில்லை என்றால் சரியல்ல. நான் தான் சொத்தின் அனுபவத்தில் இருந்து வருகிறேன் அதற்கு நான் தான் கிஸ்து வரியும் செலுத்திவருகிறேன். 1 முதல் 3 பிரதிவாதிகள் 10 ஆம் பிரதிவாதிக்கு பொது அதிகாரம் கொடுத்து 11வது பிரதிவாதியாகிய பாபுவிற்கு சொத்தினை விற்பனை செய்துள்ளனர் என்றால் சரிதான். மேற்படி வழக்கு சொத்தின் அனுபவத்தில் தொடர்ந்து நான் இருந்துவருகிறேன் என்பதை குறிக்கும் வகையிலும் நிலவரி செலுத்திவருகிறேன் என்பதை குறிக்கும் வகையிலும் நான் ஆவணங்கள் ஏதேனும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல்

செய்துள்ளேன். நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றும் நான் மேற்படி ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நரசம்மாள் பெயரில் உள்ள கிரைய பத்திரத்தின் படி மேற்படி நான்கு ச்ர்வே எண்களுக்கும் நரசம்மாள் பெயரில் பட்டா 157 கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். நரசம்மாள் இறப்பிற்கு பிறகு பிரதிவாதிகள் 1 முதல் 3 வரையிலானவர்கள் பெயரில் மேற்படி புல எண்களுக்கு பட்டா எண் 203 என மாற்றப்பட்டது என்றால் சரியல்ல. யு.டி.ஆர் பதிவேடுகளில் என் பெயர் அடிக்கப்பட்டு அவர்கள் பெயர்கள் சேர்க்கப்பட்டது.

7. மேற்படி பிரதிவாதிகள் 1 முதல் 3 வரையிலானவர்கள் தான் பட்டா மாற்றத்திற்கு பிறகு இன்றுவரை வழக்கு சொத்தினை பயிரிட்டு ஆண்டு அனுபவித்து வருகின்றனர் என்றால் சரியல்ல. நான் பாபுவிற்கு கொடுத்த பவர் பத்திரம் வாசாஆ 9 ன் படி ரத்து செய்யப்பட்டது என்றால் சரிதான். மேற்படி வாசா ஆ 9ல் பட்டா எண் 737 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வாசா ஆ 7 ஆவணத்தின் படி ச்ர்வே எண் 306/3க்கு 10ம் பிரதிவாதி ஜெயக்குமாருக்கு பவர் கொடுத்து 11ம் பிரதிவாதி பாபுவிற்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது என்றால் அது பற்றி முதலில் எனக்கு தெரியாது. விற்பனை செய்த பிறகு தெரிந்துக்கொண்டேன். வாசா ஆ 7 இந்த தாவா தேதிக்கு முன்னிட்ட ஆவணம் என்றும் அதனால் இவ்வழக்கு செல்லத்தக்கதல்ல என்றும் கூறினால் சரியல்ல. வாசா ஆ 7 குறித்து நான் ஏதெனும் வழக்கில் பரிகாரம் கோரியுள்ளேனா என்றால் அது செல்லாது என கூறியுள்ளேன். 18.08.2009 தேதியிட்ட 1 முதல் 3, 10, 11 மற்றும் 12 பிரதிவாதிகளுக்கு நான் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு முறையாக அவர்களுக்கு சார்வு செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. வாசா ஆ 12 தயாரிக்கப்பட்ட அஞ்சல் ஒப்புகை அட்டைகள் என்றால் சரியல்ல.

8. எனது பிரமான பத்திரம் பக்கம் 2ல் எனது தந்தையார் சொத்தினை அடமானம் தான் வைத்தார் என்றும் பெயரலவில் ஒரு கிரைய பத்திரம் எழுதிக்கொடுத்தார் என்றும் நான் கூறுவது தவறான சங்கதி என்றால் சரியல்ல. மேற்படி கிரையத்திற்கான முழு கிரைய தொகையையும் எனது தந்தையார் பெற்றுக்கொண்டார் என்றால் சரியல்ல. மேற்படி எனது தந்தையார் வழக்கு சொத்தினை அடமானம் தான் வைத்தார் என்றும் அதற்கு பதிலாகதான் பெயரளவில் கிரைய பத்திரம் எழுதினார் என்பதை குறிக்கும் வகையில் இந்நீதிமன்றத்தில் ஆவணம் ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் நம்பிக்கையின் அடிப்படையில் செய்த

பத்திரத்தை வைத்து பிரதிவாதிகள் மோசடி செய்தனர். எனது தந்தையார் கிரையம் செய்த சொத்தினை நான் அபகறிக்க பொய்யான முகாந்திரத்துடன் தவறாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்று பிரதிவாதிகள் கூறினால் சரியல்ல. மேற்படி நான் கூறியுள்ள அடமானம் மற்றும் பெயரளவிலான கிரைய பத்திரம் குறித்தும் நான் தெரிவித்துள்ளது பொய்யாக இட்டுக்கட்டி கூறப்பட்ட சங்கதிகள் என்றால் சரியல்ல.

9. எனது தந்தையார் 1936ல் முறையாக ராஜம்மாளுக்கு கிரையம் எழுதிக்கொடுத்துள்ளார் என்றும் பின்னர் ராஜம்மாளிடம் இருந்து நரசம்மாள் 1941ல் ஒரு பதிவு செய்யப்பட்ட கிரைய பத்திரம் மூலம் வழக்கு சொத்தினை கிரையம் பெற்றுள்ளார் என்றும் கூறினால் சரியல்ல. மேற்படி ராஜம்மாள் கிரையம் செய்த சொத்தினை நரசம்மாள் கிரையம் பெற்று நரசம்மாளுக்கு பிறகு அவரது வாரீசுகளான பிரதிவாதிகள் 1 முதல் 3 வரையிலானவர்கள் வழக்கு சொத்தினை ஆண்டு அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரியல்ல.

**(வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது)**

**விசாரணை முடியும் நேரம்- 12.58 p.m.**